பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 13 (27—1—68) சனி ★ வெளியூர்: தை 14 (28—1—68) ஞாயிறு [இதழ்: 187

பெங்களூர் இரணகளம்— யார் காரணம்?

"கோளாறுகள் நிறைந்த ஒரு மொழிக் கொள்கையைச் சிலர் பிடிவாதமாகக் கடைபிடித்து வருவதும், பெரும்பான்மையான இந்தியக் குடிமக்கள்மீது சிந்தனையற்ற முறையில் இந்தியைத் திணித்து இந்திய ஒற்றுமைக்கே அவர்கள் கல்லறை தோண்டிக் கொண்டிருப்பதும்தான், இத்தனைத் தொல்லைகளுக்கும் அடிப்படையான காரணம்."

—'டெக்கான் ஹெரால்டு' பெங்களூர்: 24—1—68

காங்கிரசுக்கு அண்ணா அறைகூவல்

[நா]ன் நல்லானதைச் செய்தேன்—டெல்லி அரசு தன்னாலானதைச் செய்யட்டும்!

எத்தகைய கடும் நடவடிக்கையையும் ஏற்கத் தயார்!

சென்னை, சன. 27—

"'இந்தி ஒழிப்புப் பற்றிய புதிய தீர்மானம், தமிழக அரசுக்கும்—டில்லி [அ]ரசுக்கும் உள்ள தொடர்புக்கு ஊறு விளைவிக்குமா? இதற்காக எந்தச் சட்டப்படி நம்மீது நடவடிக்கை எடுக்கலாம்' என்று அங்குள்ள நிபுணர்கள் யோசிக்கக்கூடும்; ஆனால், நான் ஒரு துளியும் யோசிக்கவில்லை!

"மத்திய அரசு நடவடிக்கை எடுக்க விரும்பினால் அது எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் தயாராக இருக்கிறேன்! அவர்கள் என்ன செய்துவிட முடியும்—சிறையில் தள்ளக்கூடும்! சிறை எனக்குப் புதிதல்ல!

"நான் எம். ஏ. படித்த இளைஞனாக இருந்தபோதும், சிறை சென்றிருக்கிறேன்; சட்டமன்ற உறுப்பினனாக இருந்தபோதும், நாடாளுமன்ற உறுப்பினனாக இருந்தபோதும் சிறை சென்றிருக்கிறேன்; இப்பொழுது அமைச்சனாக இருக்கும்பொழுதும் காங்கிரசு நண்பர்களால் [சி]றை செல்லும் வாய்ப்புக் கிடைக்குமென்றால், மிக்க மகிழ்ச்சியோடு [அ]தனை ஏற்றுக்கொள்வேன்; அது என் வாழ்க்கை வரலாற்றிலேயே வசீகரமான அத்தியாயமாக இருக்கும்; ஆகவே, 'சிறை' என்னை மிரட்டமுடியாது!

"அவர்கள் இன்னொன்றும் செய்யக்கூடும்; 'இந்தியைப் பள்ளிகளிலிருந்து [நீ]க்கியது, அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதல்ல' என்று சொல்லி, தமிழக அரசைக் கவிழ்க்கக் காங்கிரசு உறுப்பினர்கள் முயன்றால், அதற்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்; வேறு 'ஆட்சி' அமைக்க முயலலாம்—தாராளமாக முயலட்டும்; நான் மட்டுமன்றி, கழகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும், 'மத்திய அரசு என்ன கடுமையான நடவடிக்கை எடுத்தாலும், அதை ஏற்றுக் கொள்வது' என்ற முழு உறுதியுடன்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்' என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்!

"தமிழக அரசு கவிழ்க்கப்பட்டுவிட்டால், மத்திய அரசு 100 அல்லது 150 நாட்களில் கவிழ்ந்துவிடும் நிலைமை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை; இப்பொழுதே மத்திய அரசு வலுவில்லாமல் இருந்துகொண்டிருப்பது அவர்களுக்கே தெரியும்! இந்த நிலையில், 'மத்திய அரசைக் கவிழ்க்கவேண்டும்' என்று நினைப்பவர்களுடன் நாங்களும் ஒத்துழைத்தால், நிலைமை என்னவாகும்?

"1937-ம் ஆண்டு தொடங்கிய இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத்தின் இறுதிக் கட்டமாகத்தான் இப்பொழுது சட்டமன்றத்தில், இரு மொழித் திட்டத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது! இனி, புதிய அத்தியாயம் எழுதவேண்டியவர்கள் நாம் அல்லர்! என்னால் ஆனதைச் செய்துவிட்டேன்! இனி, டெல்லி அரசு தன்னால் ஆனதைச் செய்யட்டும்!

"நான் ஏற்கனவே ஒருமுறை கூறியபடி, ஒவ்வொருவருக்கும் ஒருமுறைதான் உயிர் போகும்—இருமுறை போகாது! அதிலும், இந்தக் காரியத்திற்காக நம்முடைய உயிர் போவதானால், 'நல்ல காரியத்திற்கு நம்முடைய உயிர் போகிறது' என்று நிச்சயம் மகிழ்ச்சியடைவோம்!

"வாழவேண்டிய வயதில், தன் பெற்றோரின் இன்பக் கனவுகளை நிறைவேற்ற முடியாமல் இளைஞன் இராசேந்திரன், இந்தியை எதிர்த்துத் தன் இன்னுயிரை நீத்தான்! அப்படியிருக்க, அறுபது வயதை எட்டிக்கொண்டிருக்கும் நிலையில், ஆசைகள் அடங்கி—பெறவேண்டியதைப் பெற்றுவிட்டவர்கள் இறப்பதால் நஷ்டம் ஏதும் ஏற்படாது! இதில் மத்திய அரசு எந்தக் காரியம் செய்தாலும் ஏற்றுக்கொள்வது என்ற உறுதியுடன்தான் நாங்கள் இருக்கிறோம்!

"இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்க நாம் முடிந்த அளவு விலை தந்தோம்! அதைவிட இன்று நாம் பெற்றுள்ள நிலை பெரிது! அந்த நிலையை நாம் பெறக் காரணமாக இருந்த இந்தியை எதிர்த்துப் போராடி மாண்டவர்கள் அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்துவோம்!"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், இந்தி எதிர்ப்பு அறப்போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதற்காக நவ. 25-ம் நாளன்று, நேப்பியர் பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் திட்டவட்டமாக அறிவித்துத் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தினார்; அவரது உரை வருமாறு:—

1965-ம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தியாகம் செய்த மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தங்களுடைய வீர வணக்கத்தைச் செலுத்துகின்ற வகையில்—இந்த நாளிலே இந்த வீர வணக்கத்தை இங்கே நான் செலுத்திக்கொண்டு இருக்கிற இதே நேரத்தில்—நம்முடைய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்ற நண்பர்கள் அனைவரும் பல்வேறு நகரங்களில் வீர வணக்கத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இப்படி வீர வணக்கம் செலுத்துவது தமிழ்நாட்டு மரபிலே ஒன்றாகும். அந்த வகையிலே இன்றைய தினம் தமிழகம், தொடர்ந்து வீர வணக்கத்தை நடத்திக்கொண்டுவருகிறது.

வீர வணக்கம் செலுத்துவது தமிழ்நாட்டு மரபு என்றாலும், அந்த வீர வணக்கத்திலே அமைச்சர்கள் கலந்துகொள்வது இதுதான் முதல் தடவை என்பதை வடக்கே உள்ளவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று 1938-ல் இருந்து போராடிவந்தோமோ அந்தக் காரியத்தைச் சட்டமன்றத்திலேயே செய்துவிட்டோம்! 'இந்தி இனி தமிழ்நாட்டில் இல்லை' என்று தெரிவித்துவிட்டோம்!

சட்டாய இந்தியை எதிர்த்து 30 ஆண்டுகளுக்குமுன் நாங்கள் போராட்டக் களம் அமைத்து—ஆயிரம்பேர் சிறைசென்று தாளமுத்து, நடராசனை இழந்தோம்! அவர்களுடைய உடல்களை இடுகாட்டுக்குக் கொண்டு சென்ற ஊர்வலத்தில் சில நூறு பேர்களே கலந்துகொண்டனர்!

என்றாலும், எங்கள் உள்ளத்திலே ஓர் உறுதி இருந்தது—'இன்று கவனிப்பாரற்றுக் கிடக்கும் இந்தி எதிர்ப்பு இயக்கம், வேகமாக வளர்ந்து—மக்கள் மனதை உலுக்கி—மகத்தான வெற்றிபெறும்' என்பதுதான் அந்த உறுதி! அந்த அந்த உறுதி இன்று வெற்றித் தேடித் தந்தது என்பதை, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் துவக்கம்முதல் ஈடுபட்டிருந்த என்னால்தான் உணர முடியும்!

'ஒழிக, ஒழிக' என்றவர்கள், 'இந்தியை ஒழித்தேவிட்டார்களே' என்று ஊரார் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்; ஆனால், சுப்பிரமணியம் ஒரே ஒருவர் மட்டும்தான், 'இது, சிறுபிள்ளைத்தனம்' என்று சொல்கிறார்.

இப்படிப்பட்ட காரியம், 'சிறுபிள்ளைத் தனம்' என்றால்—'இந்தக் காரியத்தைச் செய்ய சிறுபிள்ளையால்தான் முடியும்' என்று அவர் கருதினால்—நான் சிறுபிள்ளையாகவே இருக்க விரும்புகிறேன்; 'இப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதிலே எந்தத் தவறும் இல்லை' என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1965-ல் மாணவர்கள் கிளர்ச்சி நடந்த நேரத்தில் சுப்பிரமணியமும் அழகேசனும் இராஜினாமாச் செய்ததை, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 'பக்குவம் பெறாத செயல்' என்று சொன்னார்; 'சிறுபிள்ளைத்தனம்' என்பதைத்தான் அவர் அத்தனைப் பக்குவமாகச் சொன்னார்! 1965-ல் அவர் அந்தப் பெயரைப் பெற்றார்—அதை நான், 1968-ல் பெறுகிறேன்!

தொடர்ந்து நம்முடைய தமிழ் நாட்டில், இரண்டாண்டுகட்கு ஒரு முறை இப்படிப்பட்ட 'சிறுபிள்ளைத்தனம்' நடைபெற வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

என்னுடைய நண்பர் சுப்பிரமணியம் அறிக்கையில், 'கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கவில்லை; சோஷலிஸ்டு ஆதரிக்கவில்லை; பிரஜா சோஷலிஸ்டுகள் ஆதரிக்கவில்லை; சுதந்தராவும், முஸ்லிம்

(4-ம் பக்கம் பார்க்க)

எவரையும் வீதியில் விரட்டும் எண்ணமில்லை!

"இந்தி ஆசிரியர்கள் வாழ்வில் மண்போட்டுவிட்டதாக—வேலை போகும்படிச் செய்துவிட்டதாகக் காங்கிரசார் இனிமேல் பிரசாரம் செய்யத் துவங்குவர்!

"எவருடைய வாழ்விலும் மண் போடவில்லை—ஒருவருக்கும் வேலைபோகாது!

"இதுவரையில் இந்தி கற்றுத் தந்த ஆசிரியர்களுக்கு, இனி, மாற்று வேலை தரப்படும்; அவர்கள் வேறு பாடங்களுக்கான பயிற்சியைப் பெற்றவர்களாக இருந்தால், அதைக் கற்றுத்தரலாம்; அல்லது நூல் நிலையங்களைக் கண்காணிப்பவர்களாக — எழுத்தர்களாக இருக்கலாம்; எந்தப் பாடமும் தெரியவில்லையென்றால், திருக்குறளையாவது சொல்லித் தரலாம்!

"ஆகவே, அவர்கள் அனைவருக்கும் வேலை உண்டு; ஆனால், முன்பு செய்துவந்த வேலை அல்ல—தமிழக அரசு தரும் வேலை! தமிழ்நாட்டிற்கும் — மாணவர்களுக்கும் தேவையான வேலை!

"யாரையும் வேலையை விட்டு வீதியில் விரட்டும் எண்ணம், தமிழக அரசுக்கு இல்லை!"

—முதலமைச்சர் அண்ணா

தமிழகக் கல்வி நிலையங்கள்— சனவரி 31-ல் திறக்கப்படலாம்

மதுரை, சன. 25—

"தமிழகக் கல்வி நிலையங்கள் வருகிற சன. 31-ஆம் நாள் திறக்கப்படலாம்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு தெரிவித்தார்.

"மொழிச் சிக்கலில் தமிழக அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை பற்றி மாணவர்கள் தங்கள் மனநிறைவைத் தெரிவித்துள்ளனர்; கல்வி நிலையங்களை விரைவில் திறக்கவேண்டும் என்று மாணவர் தரப்பிலிருந்தும் கோரப்பட்டுள்ளது; எனவே, வருகிற திங்கட்கிழமை இது பற்றி முடிவு செய்யப்படும். வருகிற 30-ஆம் நாள் காந்தியார் நினைவு நாளாக இருப்பதால், அதற்கு மறுநாள் கல்வி நிலையங்கள் திறக்கப்படலாம்" என்று அமைச்சர் கூறினார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 தை 13 (27—1—68) சனி

புரட்சிகரமான முடிவு!

நமது முன்னேற்றக் கழகத்துக்கும்—அது பொறுப்பேற்றுள்ள இன்றையத் தமிழக அரசுக்கும், மொழித் துறையில் கொள்கை எதுவும் கிடையாது என்றும், ஏதாவது கொள்கை இருப்பதாகக் குறிப்பிட வேண்டுமானல் அது தெளிவற்றது என்றும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க தலைவர்கள், கழகத்தின்மீது குற்றஞ்சாட்டி வந்திருக்கின்றனர். தங்கள் கட்சி இழந்துவிட்ட செல்வாக்கை மீண்டும் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையில், இக்குற்றச்சாட்டை அவர்கள் திரும்பத் திரும்ப இடையருது கூறி வந்தனர்.

காங்கிரசுத் தலைவர்கள் குற்றஞ்சாட்டி வந்திருப்பதுபோல்—மொழித் துறையைப் பொறுத்து—கழகத்துக்குத் திட்டவட்டமான – தெளிவான கொள்கை இல்லாமல் இல்லை. 'ஏதோ சென்றவரையில் செல்லட்டும்; குற்றச்சாட்டை நம்புகின்றவர்கள் நம்பட்டும்; அதுவரையில நம்முடைய கட்சிக்கு இலாபந்தான்' என்ற அற்ப நினைப்பிலேயே காங்கிரசுத் தலைவர்கள், மேற்படி குற்றச்சாட்டைத் தொடர்ந்து கூறிக்கொண்டு வந்தனர்.

இனி, அக்குற்றச்சாட்டைக் கழகத்தின்மீது வீசுவதற்குக் காங்கிரசுத் தலைவர்கள், கனவில்கூடக் கருதமாட்டார்கள். வேதனையால் கண்ணைப் பிசைந்தும், வெட்கத்தால் தலைகவிழ்ந்தும்தான், இனி காங்கிரசுத் தலைவர்கள் நாட்டில் உலவ வேண்டும்.

மொழித் துறையைப் பொறுத்துக் கழகத்தினுடையவும்—அது பொறுப்பேற்றிருக்கின்ற தமிழக அரசினுடையவும் தெளிவான கருத்தும் இறுதியான முடிவும் என்ன என்பதை, தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மொழி பற்றிய தீர்மானம் விளக்கம் தருகிறது. தமிழ் மொழியும் – ஆங்கில மொழியும்தான் கழக அரசின் மொழிக் கொள்கை என்பதை, ஐயத்திற்கிடமின்றி தீர்மானம் தெளிவுபட உறுதி செய்திருக்கிறது.

'மும்மொழிக் கொள்கையைத் தமிழக அரசு கைவிட்டுவிட்டது' என்ற முடிவும், தீர்மானத்தில் இடம் பெற்றிருக்கிறது. இம்முடிவின்படி, தமிழகப் பள்ளிகளில் இந்தி பயிற்றுவிக்கப்பட்டு வருவது இனி நிறுத்தப்பட்டுவிடும்; அதாவது, 'இனிமேல் தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழி பயிற்றுவிக்கப்படமாட்டாது' என்பதாகும்.

இப்பொழுதுகூடப் பள்ளிகளில் இந்தி பயிற்றுவிக்கப்படுவது, வெறும் பெயரளவுக்குத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை. ஏதோ, 'இந்தியைத் தமிழக மாணவர்கள் மிக்க ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் பயின்று வருகின்றனர்' என, இந்திக்காரர்களை நம்பவைக்க வேண்டும் என்பதற்காகவும், இந்திய அரசாங்கத்திடம் நற்சான்று பெறவேண்டும் என்பதற்காகவும்தான்—தமிழகப் பள்ளிகளில் அம்மொழியைப் பயிற்றுவிக்கும் நாடகத்தை, ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த காங்கிரசுக் கட்சி நடத்திவந்திருக்கிறது என்ற உண்மையை அனைவரும் அறிவர். இப்பொழுது, ஏற்கனவே காங்கிரசுக் கட்சியினர் நடித்துவந்த அந்த அரசியல் நாடகத்துக்கு, இன்றையத் தமிழக அரசு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

'தமிழகப் பள்ளிகளில் இனி இந்தி மொழி பயிற்றுவிக்கப்படமாட்டாது' என இன்றையத் தமிழக அரசு செய்துள்ள தீர்மானத்தை, தமிழக மாணவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. இந்தி மொழிப் பயிற்சி பற்றி இன்றைய அரசு செய்துள்ள முடிவை, கட்டாய இந்தியை எதிர்த்துச் சரியாக முப்பதாண்டுகளுக்கு முன்னர் சிறைக் கொடுமைக்கு ஆளான தோழர்களும் மகிழ்வர்; சிறையிலே தங்கள் உயிரை இழந்த தாளமுத்து–நடராசன் ஆகிய இரு இளைஞர்களின் 'ஆன்மா'வும் மகிழும்—மனச்சாந்தி பெறும்.

'தமிழகப் பள்ளிகளில், இந்தி மொழி இனிக் கற்பிக்கப்படமாட்டாது' என இன்றையத் தமிழக அரசு எடுத்திருக்கின்ற முடிவு, கடந்த முப்பதாண்டுக்காலமாகத் தமிழ் மக்களில் பெரும் தொகையினர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த முடிவாகும். முப்பதாண்டுகளுக்கு முன்னர் காங்கிரசுக் கட்சி அரசால் தமிழகத்தில் முதன் முதலாக விதைக்கப்பட்ட இந்தித் திணிப்புத் தீமை, இன்றுதான்—அதுவும் இன்றையத் தமிழக அரசினல்தான் – அதுவும், அன்று கட்டாய இந்தியை எதிர்த்து ஆறு திங்கள் வெஞ்சிறைக் கொடுமைக்குத் தம்மை ஆளாக்கிக்கொண்ட அறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்ட இன்றையத் தமிழக அரசினல்தான் அகற்றப்படுகிறது என்ற நற்செய்தி, வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

'மத்திய அரசின் ஆடசிமொழியாக இந்தி மொழி மட்டுந்தான் இருந்திட வேண்டும்' என்ற ஆணவக் கருத்துடன் இருந்துவருகின்ற இந்தி வெறியர்களுக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாகும்—'தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழிக்கு இனி இடம் கிடையாது' என்ற தமிழக அரசின் ஆணை; இம்முடிவு, இந்தி வெறியர்களின் மொழி வெறியைத் தணிக்கத் துணைசெய்யும் என்றே நம்புகிறோம்.

இதே தொடர்பில், என்.சி.சி. எனப்படும் மாணவர்கள் அணியில் இடப்படுகின்ற கட்டளைச் சொற்கள், 'இந்தியில் இருக்கக் கூடாது' என்றும், 'இந்தியில்தான் இருத்தல் வேண்டும்' என இந்திய அரசினரால் வற்புறுத்தப்படும்பட்சத்தில், 'தமிழகத்திலிருக்கின்ற அம்மாணவர்களைக்கொண்ட அவ்வணிப் பிரிவு கலைத்துவிடப்படும்' என்றும் தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது. இதிலிருந்து, இந்தி மொழி திணிக்கப்பட்டிருப்பதில், தமிழ்நாட்டினர் எந்த அளவுக்கு அதிருப்தியும், வேதனையும் அடைந்திருக்கின்றனர் என்ற உண்மையை, இந்திய அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்.

'அடுத்த கல்வி ஆண்டிலிருந்து அரசாங்கக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ் மொழியே பயிற்சி மொழியாக இருந்திடும்' என்பதும், 'ஆங்கில மொழியின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டு வருவது அறவே நீக்கப்பட்டுவிடும்' என்பதும், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் இடம் பெற்றுள்ளன.

இதுபற்றி விளக்கிக் கூறிய முதலமைச்சர், 'பாட மொழி' என்ற நிலையிலிருந்து அகற்றப்படக்கூடிய ஆங்கில மொழியின் தரம் தாழ்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவும், மேலும் அம்மொழியின் தரம் கூடுதலாகவும் தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவிருக்கிறது' என்ற கருத்தையும் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கின்ருர். எனவே, ஆட்சிமொழியின் தரத்தைப் பாதுகாத்து வருவதில் உண்மையான அக்கறை கொண்டிருக்கின்றவர்கள், 'பாட மொழி' என்ற நிலையிலிருந்து ஆங்கிலம் அகற்றப்படுவதற்காகக் கவலை கொள்ளமாட்டார்கள் என நம்பலாம்.

மொழிப் பிரச்சினையில், இன்றையத் தமிழக அரசு எடுத்திருக்கின்ற முடிவு, எல்லா வகையிலும் புரட்சிகரமான முடிவாகும். இவ்வுண்மையை, தமிழக அரசாங்கம் எடுத்திருக்கின்ற முடிவை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள்கூட ஒப்புக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

—கா. க.

மத்திய அரசுடன் மோத
கேரள அரசும் துணிகிறது

அனுமதி மறுக்கப்பட்ட மசோதாவை நிறைவேற்ற முடி

சட்டமன்றக் காங்கிரசுத் தலைவரின் ஓலம்!

உணவுத் துறை அதிகாரிகளுக்கு உதவும்பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள 'மக்கள் குழு'க்களுக்குச் சட்டபூர்வ அதிகாரம் அளிக்கக் கேரள அரசு முடிவு செய்திருக்கிறது.

இது தொடர்பாக உருவாக்கியுள்ள மசோதாவுக்கு மத்திய அரசு அனுமதி தர மறுத்துவிட்டிருந்தது; ஆயினும், இப்பொழுது மீண்டும் அதனைச் சட்டமாக்கும்பொருட்டு அம்மசோதாவைத் தனி கெசட் மூலம் வெளியிட்டு, மக்களின் கருத்தறிய முடிவு செய்துள்ளது கேரள அரசு.

"கேரள அரசின் இச்செயல், மத்திய அரசின் முடிவைப் பகிரங்கமாக மீறும் ஒரு நடவடிக்கையாகும்; மத்திய—மாநில உறவுகளில் இது ஒரு புதிய சிக்கலை உருவாக்கும்"

என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

"இப்படி ஒரு சட்டம் தயாரிக்க மத்திய அரசு அனுமதி தர மறுத்துவிட்டது" என்று கேரள உணவுத் துறை அமைச்சர் செய்தி வெளியிட்ட அடுத்த நாளே 'சட்டத்தை நிறைவேற்றியே தீருவது' என்ற முடிவில் தனி கெசட் வெளியிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் சம்பந்தமாகப் பங்கீட்டு அட்டைகளைப் பரிசோதித்தல் — கடத்தப்படுவதாகச் சந்தேகிக்கப்படும் வண்டிகளைச் சோதனை செய்தல்—கொள்முதலின்போது அதிகாரிகளுக்குத் துணையாக இருத்தல் போன்ற பணிகள் செய்ய அதிகாரம் அளிப்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.

"மத்திய அரசுக்கு எதிராக ஒரு போராட்டம் நடத்துவதற்கான முயற்சியே இது"

என்று, கேரள அரசின் இந்நடவடிக்கை குறித்துக் கருத்துக் கூறுகையில் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவர் கருணாகரன் கூறியுள்ளார்.

தமிழக அரசின் முடிவு

தி. மா. மு. க வரவேற்பு

கோவை, சன. 25—கோவை—நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகள் கூட்டம் கோவையில் நடைபெற்றபோது, இந்தியை அடியோடு ஒழித்த தமிழக அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்தனர்.

ஏறத்தாழ 150 பேர் கலந்துகொண்ட இக்கூட்டத்திற்குத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன:—

"தமிழ் நாட்டில் இந்தியை ஒழித்துத் தமிழ்—ஆங்கிலம் மட்டுமே பள்ளிகளில் கற்றுத் தருவதற்கு வழிகோலியுள்ள தமிழக அரசை இக்கூட்டம் பாராட்டுகிறது.

"தேசிய மாணவர் படையில் (என்.சி.சி.), இந்தி 'ஆணை'ச் சொற்களை மத்திய அரசு நீக்காவிட்டால், என். சி. சி.-யைக் கலைக்க முடிவு செய்ததற்குப் பாராட்டு தெரிவிக்கிறது.

"இந்தியை எதிர்ப்பதில் தமிழக அரசின் மீது மாணவர்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர்; எனவே, பள்ளிகளையும், கல்லூரிகளையும் திறக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்கிருேம்."

அறிஞர் அண்ணா விளக்கம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

டில்லி முனையுமா?

"'இந்தி வேண்டாம் என்று தீர்மானம் போட்டால், மத்திய அரசு கோபித்துக் கொள்ளாதா?' என்று கேட்கிருர்கள்; போர் முறையில் பல வகை உள்ளதுபோல் காதலில் கூடப் பல வகை உண்டு; அதில் ஒன்று, இராட்சதக் காதல்; அதில், காதலியின் காதைப் பிடித்துத் திருகுதல்—கிள்ளுதல்—குத்துதல் போன்ற விளையாட்டுக்கள் இருக்கும்; வடநாட்டினருக்கு அப்படிப்பட்ட காதல்தான் பிடிக்குமோ என்பதால்தான் இந்தத் தீர்மானமாகும்; 'நம்மை மீறி நடப்பார்கள்' என்று தெரிந்தால்தான் அவர்கள் இறங்கி வருவார்கள்!

"'இங்கு நடைபெற்றவை டெல்லிக்கு எட்டி, பிரச்சினைக்குப் பரிகாரம் தேடமாட்டார்களா' என்பதுதான் என்னுடைய அற்ப ஆசையாகும்!

"'மேல் மட்டக் குழுவை மத்திய அரசு கூட்ட வேண்டும்' என்று காங்கிரசார் கொண்டுவந்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்; அப்படி நடந்தால் மகிழ்ச்சியடைவேன்.

"தென்னக மாநிலங்களின் முதல்வர்களுடன் கலந்து பேசிட வாய்ப்புக் கிடைத்து, அதனல் பிரச்சினைக்குப் பரிகாரம் ஏற்பட்டாலும் நான் மகிழ்ச்சியடைவேன்; ஆனல், 'முழுத் திருப்தி' எனக் கூறமாட்டேன். '14மொழிகளும் ஆட்சிமொழியாக வேணடும; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும்' என்பதுதான் எங்கள் இலட்சியமாகும்; அது நிறைவேறினல்தான் நாங்கள் திருபதியடைவோம்!"

என்ன மதிப்பு தந்தனர் அவர்கள்?

"'இந்தியினல் நமக்கு வரும் ஆபத்தைத் தடுப்பதற்கு ஆட்சி மொழித் திருத்தச் சட்டம் வருகிறது' என்ருர்கள்! மழை வந்த போது, குடை இல்லாமல் துண்டைத் தலையில் விரித்துப் பிடி பது போன்றது இது!

"இந்தி நுழைவின் வேகத்ை அது தடுப்பதுபோல், எங்க தீர்மானமும் இந்தி நுழைய விட மல் தடுப்பதாகும்!

"'ஆட்சி மொழிச் சட்டம் தமிழ் மக்கள் அனைவருக்கும் முழுத் திருப்தி அளிக்காது என்ருலும் ஒரு குறிப்பிட்ட அளவு மக்களுக்கு அதன் மூலம் திருப்தி ஏற்படும்' என்றுதான் நான், தலைமை அமைச்சரிடம் கூறினேன்; ஆனல் பிறகு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மூலம் எதிர்பார்த்த பலன் கிடைக்காது என்பதை உணர்ந்து 'ஆட்சி மொழிச் சட்டத்துட அந்தத் தீர்மானமும் இணைந் வந்தால், அதற்குக் கழ வாக்களிக்காது' என்று கூ னேன்.

"எனது வேண்டுகோளைப் ப கணித்ததில் அதிசயம் எது இல்லை! ஆனல் அந்தச் ச டத்தை அப்போதைய அனை திந்தியக் காங்கிரசின் தலை காமராசரே, 'திருத்தம் எது கூடாது' என்று பத்திரிகைய தெளிவாக அறிக்கை கொடு தும், அவர் டெல்லிக்குப் போவ தற்குமுன் அதை நிறைவேற்றி —அவர் வார்த்தைக்கு மதிப் இல்லாமல் செய்துவிட்டார்கள்

"அவருடன் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலு நாட்டின் எளிய குடும்பத்தி பிறந்து, மிகவும் உயர்ந் நிலைக்கு வந்த தலைவர் அவமதி புக்கு ஆளானர் என்பது க டிக்கத்தக்கது!

"இங்கிருந்துபோன தமிழ்நா டுக் காங்கிரசுக்காரர்களு காமராசரின் பேச்சை மதிக்க மல், ஆட்சிமொழித் திருத்தச் சட்டத்திற்கும் — தீர்மானத்திற்கும் ஆதரவாக ஓட்டுப் போட்டார்கள்!"

காலம் கடந்து கண்டுபிடித்தனர்!

"'ஆட்சி மொழித் திருத்தச் சட்டம் வந்ததும், சட்டமன்றத்தை ஏன் கூட்டவில்லை' என்று கேட்கும் காங்கிரசுக்காரர்களைக் கேட்கிறேன்—அப்போது இது பற்றி ஆராயத் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியைக் கூட்டினீர்களா? காங்கிரசுத் தலைவர் காமராசர் கருத்துக்கு எதிராக ஓட்டுப் போட்டவர்களை 'என்ன' என்ருவது கேட்டீர்களா? அல்லது வருத்தமாவது தெரிவித்தீர்களா? இதற்குக் காரணம் 'ஒரே கட்சிக்குள்ளேயே நல்ல தொடர்பு இல்லை' என்பதுதான்

"உங்களைச் சேர்ந்தவர்களே ஆதரித்த தீர்மானத்தில், 'தீங்கு இருக்கிறது' என்று காலம் கடந்தாவது கண்டுபிடித்தீர்களே—அதற்காகப் பாராட்டுகிறேன்."

பனை வெல்லத்துக்கு வரி விலக்கு!

சென்னை, சன. 24 விற்பனை வரியிலிருந்து பனை வெல்லத்துக்கு விலக்களிக்க வகை செய்யும் விற்பனை வரிச் சட்ட திருத்த மசோதா, நேற்றை சட்டமன்றக் கூட்டத்தில் அமை சர் கே. ஏ. மதியழகன் அவ களால் தாக்கல் செய்யப்பட்டது.

'பிளவு கூடாது' என்பது பிரிவினைப் பேச்சின் அடையாளமா?

அறிவுப் பிரச்சாரத்தில் தோற்று அரசியல் சட்டத் திருத்தத்தை நாடியவர்களின் அர்த்தமற்ற கூற்று!

சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினருக்கு அறிஞர் அண்ணா தந்த பதில்

23—1—68 அன்று, மொழிப் பிரச்சினைமீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டை மறுத்து விளக்கமளித்ததாவது :—

"'அரசினர் தீர்மானம், தி. மு. கழகம் தனது பழைய பிரிவினைக் கொள்கையை விடவில்லை என்பதைக் காட்டுகிறது' என்று எதிர்க் கட்சித் தலைவர் சர்தேகப் பட்டார்; பிரிவினையிலேயே என்னுடைய நாட்டம் இருக்குமானால், இந்தக் குழப்பம் வளருவதற்குத்தான் இடம் கொடுத்திருப்பேனே தவிர, குழப்பங்களைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்குக் காரணம் இல்லை.

"இந்திய அரசின் மொழிச் சட்டத்தினால் நாடு பிளவுபடும் என்றுதான் என்னுடைய திருத்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; உள்ளபடியே பிரிவினையில் எனக்கு நாட்டம் இருந்தால், 'இன்று முதல் தமிழ்நாடு தனி நாடாகிறது; தமிழ் வாழ்க' என்று தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு வெளியேறிவிடலாம்; அதற்குப் பிறகு, நான் அரசியல் வாழ்விலிருந்து வெளியேற்றப்படலாம்; அல்லது வெறும் வாழ்விலிருந்தும் அப்புறப்படுத்தப்படலாம்; ஆனால் அந்த வாக்கியம், வரலாற்றில் என்றென்றும் இடம்பெற்றுவிடும்! ஆனால், அப்படிப்பட்ட கட்டத்தில் நான் இன்றையத் தினம் இல்லை; ஆகவே, 'இது பிரிவினைக்காகக் கொண்டுவரப் பட்டது' என்ற குற்றச்சாட்டு தேவையில்லை!

"பிரிவினையைத் தடுக்க எங்களிடம் இலட்சக்கணக்கான தோழர்கள் இருக்கிறார்கள்— என்று காங்கிரசுக்காரர்கள் சொன்னதால், அவர்களுக்கு நான் பல காரணங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

"நாங்கள் பிரிவினைப் பிரச்சாரம் செய்தபொழுது, 'அது மக்கள் செவியில் விழக் கூடாது' என்று காங்கிரசுக்காரர்கள் பலமான பிரசாரம் செய்தார்கள்; அதில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை!

"நாங்கள் பிரிவினைக்கான காரணங்களைச் சொன்னபொழுது, அரசியல் சட்டத்தைத் திருத்தித்தான் எங்கள் பிரசாரத்தை நிறுத்த வேண்டியிருந்ததே தவிர, அறிவுப் பிரசாரத்தினால் மக்களைத் தங்கள் பக்கம் இழுக்க அவர்களால் முடியவில்லை!

"நாடாளுமன்ற வரலாற்றிலேயே, ஒருவருடைய பேச்சுக்காக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது இதுதான் முதன்முறை என்ற அளவுக்குப் பிரிவினைப் பிரசாரம் தடுக்கப்பட்டது! இது எங்கள் சாமர்த்தியத்துக்கு அடையாளம் என்றோ—அவர்கள் திறமைக் குறைவுக்கு அடையாளம் என்றோ சொல்லவில்லை; நாமெல்லாம் ஒருவருக்கொருவர் நண்பர்கள். நாங்கள் பிரிவினைப் பிரசாரம் செய்தபொழுது, நாட்டு மக்களிலே சிலர், 'இது நியாயம்' என்று உணர்ந்தார்கள். ஆகவே, எங்கள் பிரசாரத்திற்கு வலிவும், காங்கிரசுக்காரர்கள் எங்களுக்கு எதிராகச் செய்த பிரசாரத்திற்கு வலிவற்ற தன்மையும்தான் கிடைத்தது!"

புரிந்த பிரச்சினை--பொருந்தா வாதம்!

"மொழிப் பிரச்சினையில் பொது மக்களின் கருத்தைக் கேட்டறிய வேண்டும்" என்று, எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் கூறியது பற்றிக் குறிப்பிட்டு, அண்ணா அவர்கள் விளக்கியதாவது :—

"மொழிப் பிரச்சினை, 1937-ம் ஆண்டிலிருந்து 1967-வரை ஒரு வடிவத்திலேயே—ஒரு கோணத்திலேயே தொடர்ந்து இருந்து வருகிறது; இதுபற்றி எல்லோருக்கும் தெரியும்; புதிய நிலைமைகளை எவரும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம்கூட இல்லை; அந்த அளவுக்கு இந்தப் பிரச்சினை புரிந்திருக்கிறது!

"ஆகையால், பொதுமக்களின் கருத்தறிய அனுப்ப வேண்டும் என்ற யோசனைக்கு இணங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதற்காக வருந்துகிறேன்."

இரு மொழித் திட்டம்--அன்றே வற்புறுத்தினோம்

"தி. மு. கழகத்திடம் நிலையான கொள்கை இல்லை" என்று காங்கிரசு உறுப்பினர்கள் கூறியது பற்றி அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"நாங்கள் வேளைக்கொரு பேச்சுப் பேசுகின்றோம் என்று காங்கிரசுக்காரர்கள் சொன்னார்கள். நான் திடமான உறுதிபடைத்தவன் அல்லன் — திட்டமான கொள்கை கொண்டவன் அல்லன் — என்று பொதுமக்களிடம் சொல்லவேண்டும் என்பது அவர்கள் நோக்கமாகும்.

"35, 40 ஆண்டுகளாக நான் பொதுமக்களிடம் பழகியிருக்கிறேன்; 'நான் உறுதியாக இருப்பவன்தான்' என்று அவர்களிடம் நற்சான்று பெற்றுச் சொல்லும் நிலைக்கு வரவில்லை.

"மும்மொழித் திட்டத்தில் நான் கையெழுத்துப் போட்டுவிட்டேன் என்று இதே மன்றத்தில் காங்கிரசு உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டினார்கள். 1958-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நானும், கருத்திருமனும் இதே அவையில் இருந்தபொழுது, காங்கிரசுப் பெண் உறுப்பினர் ஒருவர் கேட்டதற்கு, 'மும்மொழித் திட்டத்தில் நான் கையெழுத்துப் போடவில்லை' என்று சொல்லியிருக்கிறேன்; அது, சட்ட மன்ற நடவடிக்கைகளில் பதிவாகியிருக்கிறது.

"அதே நேரத்தில், 'மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது' என்பதற்காக நாங்கள் தீர்மானமே கொடுத்திருக்கிறோம்; 'இந்திய அரசியல் சட்டத்தில் மொழி பற்றிய 17-வது பிரிவை நீக்கிவிடவேண்டும்' என்று 1958-ம் ஆண்டு மார்ச் 11-ந் தேதியன்று நாங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்; அந்தத் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டபொழுது, அதற்கு ஆதரவாக 14-பேர்களும், எதிராக 121-பேர்களும் ஓட்டு அளித்திருக்கிறார்கள்.

1958-ம் ஆண்டிலேயே 'மத்திய அரசு மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்' என்று எண்ணியிருந்தால் தீர்வு கண்டிருக்கலாம்; அப்பொழுது போதிய பெரும்பான்மை இருந்தது; ஆனால் அதற்கு மாறாக, இங்கே கொண்டுவரப்பட்ட தீர்மானமே தோற்கடிக்கப்பட்டது!

"மும்மொழித் திட்டத்தை இருமொழித் திட்டமாக்குவது திடீரென்று செய்யப்பட்ட முடிவல்ல. 1958-ம் ஆண்டிலேயே இப்படி ஒரு தீர்மானத்தை நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம்."

உறுதியாகக் கேட்கிறோம்--உங்கள் பதில் என்ன?

"மொழிக் கொள்கையை நாங்கள் திட்டவட்டமாகச் சொல்லி வந்திருக்கிறோம் என்பதற்காகத்தான் இப்போதும், 'இந்தி வேண்டாம்; ஆங்கிலமும், தமிழும் போதும்' என்று கூறுகிறோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

"'என்.சி.சி.-யில் இந்தி ஆணைச் சொற்களை நீக்கவேண்டும்; இல்லாவிட்டால் என்.சி.சி.-யை கலைத்துவிடுவோம்' என்று சொல்லுகிறோம்--நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

"'உங்கள் கருத்து என்ன' என்று நான் கேட்கும்போது, 'பொது மக்கள் கருத்தை அறியுங்கள்' என்று கூறுகிறீர்கள்.

"'இந்தியைப் படித்தே தீரவேண்டும்' என்று சொல்லுவீர்களா? —'சொல்லும் துணிவு இல்லை என்று கூறமாட்டேன்; மனம் வராது' என்கிறேன்; அவர்களும் தமிழ் உணர்ச்சியில் கட்டுப்பட்டுக் கிடக்கிறார்கள்; என்னதான் கதர்ச் சட்டை போட்டாலும், தமிழ் உணர்ச்சி அவர்களையும் மீறிக்கொண்டு வருகிறது; 'நாமாவது செய்யவில்லை; இந்தப் பயலாவது செய்கிறானே' என்று மகிழ்ச்சியடைகிறார்கள்!"

தொடர்பு மொழிக் கூச்சல் எதற்கு?

காங்கிரசு உறுப்பினர்கள் பலர், 'தொடர்பு மொழி வேண்டுமா?' எனக் கேட்டது பற்றிக் குறிப்பிட்டு முதலமைச்சர் கூறியதாவது :—

"இப்பரந்த இப்தியாவில் எந்தெந்த விதத்தில்—என்னென்ன தொடர்புகள் இதுவரை மக்கள் கொண்டிருக்கிறார்கள்?

"இந்தி வராததற்கு முன்பு நமக்கு எது தொடர்பு மொழியாக இருந்தது?

"கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீருக்குச் சென்ற மக்கள் தொடர்பு மொழி இல்லாததால் திண்டாடினார்கள் என்று எங்கே நிலைமை இருக்கிறது?

"இன்னும் சென்னை நகரத்தையே பார்க்காத கிராமவாசிகள் தென்னகத்திலேயே இருக்கிறார்கள்; கடற்கரையே பார்க்காத மக்கள் இன்னும் இருக்கிறார்கள். ஆகவே, 'தொடர்பு மொழி—தொடர்பு மொழி' என்று தேவை அதிகம் இல்லாமல் பெரிதுபடுத்திப் பேசப்படுகிறது.

"தொடர்பு மொழி யாருக்குத் தேவை? — படித்தவர்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு; வியாபாரிகளுக்கு; பயணிகளுக்கு; ஆனால், இவர்கள் நூற்றுக்கு எத்தனைப் பேர்?

"தொடர்பு மொழி இல்லாமல் எத்தனை இலட்சம் பேர்—எந்தத் தவிப்பு ஏற்பட்டு—யாருக்கு மனுப் போட்டார்கள்?"

அன்றைய அரசும் இன்றைய அரசும்!

மாணவர்களின் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் குறிப்பிட்டுப் பேசுகையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியதாவது :—

"1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கும் — இப்போதைக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது.

"1965-ல், மாணவர்களுக்குப் பேட்டி அளிக்கக்கூட அன்றைய முதலமைச்சர் மறுத்தார்; ஆனால் இன்று மாணவர்களின் உணர்ச்சியை அரசு மதிக்கிறது — நான் மதிக்கிறேன்; காரணம், மாணவர்கள் யார்? நமது சந்ததிகள் —எதிர்கால உருவங்கள்— நமது இரத்தத்தின் இரத்தம்!

"அனைத்து மாணவர்களின் கருத்துக்களையும் நான் கேட்கிறேன். இன்னும் கேட்கப் போனால் சில மாணவர்கட்கு நானே கடிதமும் எழுதிப் பேச வருமாறு அழைத்திருக்கிறேன்; ஆனால் அவர்கள் (மாணவர்கள்) வரவில்லை! அன்றைய முதல் அமைச்சர் மாணவர்களுக்குப் பேட்டி அளிக்க மறுத்தார்! இன்று எனக்குச் சில மாணவர்கள் பேட்டி அளிக்க மறுக்கிறார்கள்! அந்த அளவுக்கு நான் பணிந்து செல்கிறேன்—அவர்கள் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கிறேன்!

இதுதான், 1965-க்கும் இன்றைக்கும் உள்ள வேறுபாடு ஆகும்!

"ஆட்சி மொழி பற்றி இறுதி முடிவு செய்வது பாராளுமன்றம்—அங்கே காங்கிரசார் தான் பெரும்பான்மை—இது புரியாதா மாணவர்களுக்கு!"

(2-ம் பக்கம் பார்க்க)

ஸன்காஸ்ட்

சிறந்த மோட்டார் உறுப்புகள்

கிளட்ச் ஹவுஸிங், பிரேக் ட்ரம்ஸ், கிங்பின்ஸ்



உறுதியும் உழைப்பும் மிக்க மோட்டார் உறுப்புகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதனை பூர்த்திசெய்ய, சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தார் மதுரையில் உள்ள தங்கள் நவீன தொழிற்சாலையில் ஸன்காஸ்ட் கிளட்ச் ஹவுஸிங்ஸ், பிரேக் ட்ரம்ஸ், கிங் பின்ஸ் முதலியவற்றைத் தயாரிக்கின்றனர்.

மிக உயர்ந்த சாமான்களைக் கொண்டு, மோட்டார்த் துறையில் பல்லாண்டுகள் அனுபவமுள்ள தொழிலாளர்கள், திறமையான மேற்பார்வையாளர்களின் கீழ் ஸன்காஸ்ட் மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கின்றனர்.

SUNKAST

சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்
B. சூப்பர் 1 & 2 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், மதுரை 7
(ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

TVS

tvs-s-4392

வீர வணக்கக் கூட்டத்தில் அண்ணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிக்கும்தான் ஆதரிக்கின்றன' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரசுக்காரர்கள் இந்திரா காந்திக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; அவர் என்னைப் பார்த்து, 'என்ன அண்ணாதுரை; இப்படி அவசரப்பட்டுத் தீர்மானம் போட்டு விட்டீர்களே' என்று கேட்டால் நான் தெளிவாக அவருக்குச் சொல்வேன் — 'நாங்கள் எது தேவை என்று கருதினோமோ— தமிழகத்து மக்கள் எதை விரும்பினார்களோ—அதைச் செய்தேன்' என்று சொல்வேன்; ஆனால் காங்கிரசுக்காரர்களைப் பார்த்து, 'இந்த அக்கிரமச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில் ஏன் எதிர்த்து ஓட்டளிக்கவில்லை' என்று கேட்டால் அவர்கள் என்ன பதில் அளிப்பார்கள்? அதற்காகத்தான் சுப்பிரமணியம், இப்படியெல்லாம் கூறியிருக்கிறார்!

'சிறுபிள்ளைத்தனம்' என்று கூறும் அவருடைய கட்சியினர், அதனை எதிர்த்தாவது ஓட்டுப் போட்டார்களா—இல்லையே!

'இந்தி - வேண்டாம் என்று நாங்கள் சொல்லுகிறோம்; உங்கள் பதில் என்ன?' என்று கேட்டோம்—சொன்னார்களா?

அவர்கள் ஒன்று கேட்கக்கூடும்— 'நீ இன்னும் எத்தனை நாளைக்கு அமைச்சராக இருக்கப் போகிறாய்' என்று! நான் அவர்களுக்குச் சொல்கிற பதில் இதுதான் —'நாங்கள் எத்தனை நாளைக்கு அமைச்சராக இருக்கவேண்டுமோ அத்தனை நாள் இருந்தாகிவிட்டது' என்று!

'உத்தியோகம் வேண்டுமானால், இந்தி படி' என்று சொல்லுகிறார்கள்!

'இந்தி அல்லது ஆங்கிலம் இரண்டில் ஒன்று படித்தால் போதும்' என்று சட்டம் போட்டுவிட்டு, 'இந்தி படிக்காவிட்டால் வேலை கிடைக்காது' என்று சொன்னால் யார் நம்புவார்கள்?

இதைக் காமராசர் ஒருவர்தான் தெளிவாக உணர்ந்து, பெங்களூரில், 'இந்தி, ஆங்கிலம் இரண்டில் ஒன்று படித்தால் வேலைக்குப் போகலாம் என்று சொன்னால், எவன் இந்தியைப் படிப்பான்?' என்று கேட்டார்!

அவர் பல்கலைக்கழகத்திற்குச் செல்லாதவர்; அதனால், சுப்பிரமணியத்துக்குத் தெரிந்தது காமராசருக்குத் தெரியாது! காமராசர், மக்களோடு பழகியவர்—மக்கள் இதயம் அவருக்குத் தெரியும்; அதனால்தான், சுப்பிரமணியத்துக்குத் தெரியாததைக் காமராசர் சொன்னார்—'இந்தி படிக்காவிட்டால் ஆங்கிலம் படிக்கலாம் என்று கூறினால், யார் இந்தி படிப்பார்கள்' என்று அவர் கேட்டார்.

அதற்குப் பிறகுதான் நான்கூட உணர்ந்தேன்!

தேவை இல்லாமல் இந்தி எதற்கு? மாணவர்களை இந்தித் தேர்வு எழுதச் சொன்னால், அவர்கள், ஆசிரியரைப்பார்த்து 'ஒன்றும் தெரியாது' என்று சொல்வார்கள்; ஆசிரியர், 'பரீட்சையில் சும்மா உட்கார்ந்து எழுந்துவிடுங்கள் -- போதும்' என்று சொல்வார்; அவர்கள் என்ன தோன்றுகிறதோ அதை எழுதிவைத்துவிட்டு வருவார்கள்!

இந்தக் கேலிக்கூத்தில், இந்தியை வைத்து இருக்கிறார்கள்! 'ஓராண்டில் 40 ஆயிரம் பேர்— 60 ஆயிரம் பேர் எழுதினார்கள்; எட்டு இலட்சம் பேர் இதுவரை தமிழ்நாட்டில் இந்தித் தேர்வு எழுதினார்கள்' என்ற கணக்குக் காட்டத்தான் இந்தியை வைத்துக்கொண்டு இருந்தார்கள்!

இதை சட்டமன்றத்தில் மூக்கையா தேவர் அழகாகச் சொன்னார்—'நீங்கள் காட்டிய பொய்க் கணக்கை அண்ணாதுரை கிழித்தெறிகிறார்; அதற்குத்தான் இந்தத் தீர்மானம்' என்று!

என்னையேகூட லால்பகதூர் சாஸ்திரி இதுபற்றிக் கேட்டிருக்கிறார்—'தமிழ்நாட்டில் இத்தனை ஆயிரம் பேர் இந்தி படிக்கிறார்களே' என்று அவர் பெருமையாகக் கூறினார்; 'இந்தித் தேர்வு எழுதுவதாக ஒப்புகைக்குத் தகவல் தருகிறார்கள்' என்று அவரிடத்தில் சொன்னேன்; அதை அவர் நம்பவில்லை!

இன்று நாங்கள், 'இந்தி வேண்டாம்' என்று முடிவு எடுத்த பிறகு, இதுவரை அவர்களுக்கு வந்த கணக்கு பொய்க் கணக்கு என்று உணரப்போகிறார்கள்!"

★

அண்ணா தலைமையில் உள்ளதுதான் நல்லாட்சி!

எஸ். எம். பானர்ஜி புகழுரை

திருச்சி, சன. 25—

"தமிழகத்தில் அண்ணா தலைமையிலான தி. மு. க. ஆட்சிதான் நல்லவைகளைச் செய்து வருகிறது இது குறித்து மகிழ்கிறேன்"

என்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். பானர்ஜி, இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திய நாட்டின் அரசு பற்றி அவர் குறிப்பிடுகையில் சுட்டிக் காட்டியதாவது:—

"நமது அரசு, மக்கள் நல்வாழ்வுக்கான அரசல்ல; மக்களுக்கும் அவர்களுடைய நல்வாழ்வுக்கும் விடைகொடுத்து அனுப்பும் அரசாகும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நியாயம் எனத் தோன்றியதைச் செய்யத் தயங்கோம்!

"'இந்தியை என். சி. சி.-யில் இருந்து எடுத்துவிட்டால், தமிழ்நாட்டுக்காரர்கள் பட்டாளத்தில் சேர முடியாதே' என்று சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

"தமிழ்நாட்டிலிருந்து இராணுவத்தில் சேருவோர் எண்ணிக்கை எவ்வளவு என்பதும், அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதும்—இராணுவ இரகசியங்கள் என்றாலும்—நாடறிந்த ஒன்று!

"ஆனால், என். சி. சி. போன்ற அமைப்பில் இந்திச் சொற்களை நீக்க மத்திய அரசு முன்வரவில்லையென்றால், அந்தப் பெயர் இல்லாமலேயே அதே போன்ற அணிவகுப்பு அமைப்பை ஏற்படுத்தத் தமிழக அரசு தயார் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். 'அதுவும் தவறு' என்றால், அதைப் பற்றிக் கவலைப்படமாட்டேன்!

"எங்களுக்கு, 'நியாயம்' என்று தோன்றியதைச் செய்வோம்! அதை நீங்கள் தவறாக எடுத்துக் கொண்டால் எடுத்துக் கொள்ளுங்கள்!"

--முதலமைச்சர் அண்ணா

(வீர வணக்க நாள் கூட்டத்தில்)

உடலில் உயிர் உள்ளவரையில்...!

"'ஏக இந்தியா' என்ற தத்துவம் பேசி, இந்தியைத் திணித்து ஆதிக்கம் செலுத்த நினைக்கிறார்கள்! 'ஒருமைப்பாடு குலைய வேண்டும்' என்ற எண்ணம் எனக்கு இல்லை; எப்படியாவது இந்தி ஆதிக்கத்தைப் புகுத்தவேண்டும் என்று எண்ணுவதைத் தடுத்து நிறுத்தும்வகையில்தான் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது!

"தமிழகம், இந்தியையும்—இந்தி ஆதிக்கத்தையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது! இந்தப் பிரச்சினையில் நாங்கள், திட்டவட்டமாக ஒன்றும் சொல்லவில்லையென்று கூறுகிறார்கள். 1937-ம் ஆண்டிலிருந்தே நாங்கள் இதில் திட்டவட்டமாகவே இருக்கிறோம்! உடலில் உயிர் உள்ளவரையிலும் இந்தி ஏகாதிபத்தியத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்!

"காங்கிரசுக்காரர்கள் இந்தியைத் திணிப்பதிலேயே காலத்தைச் செலவிட்டிருக்கிறார்கள்—நாங்கள், எதிர்ப்பதிலேயே காலத்தைச் செலவிட்டிருக்கிறோம்!"

---அறிஞர் அண்ணா

(வீர வணக்க நாள் கூட்டத்தில்)

மீண்டும் 'காங்கிரசு சைத்தான்'!

கொள்ளைக் கூட்ட முறையில் பீகாரில் ஆட்சி அமைக்கும் முயற்சி!

பதவி விலகும் மகாமாய பிரசாத் சின்கா கண்டனம்

பாட்னா, சன. 26—

"சனநாயகம் கொலை செய்யப்பட்டுவிட்டது; பகிரங்க இலஞ்சம், ஊழல், நிர்ப்பந்தம், கடத்தல், சுடுதல், மற்றும் கொள்ளைக் கூட்ட முறைகளால் முடிவு உருவாக்கப்பட்டது!

"அரசாங்க அதிகார பலம் இருந்தபோதிலும், சனநாயகத்தைக் காப்பதற்காக யாரையும் நாங்கள் கைது செய்யவில்லை!

"யார் செய்தது சரி—யார் செய்தது தவறு என்பதை முடிவு செய்ய வேண்டியவர்கள் மக்கள்! இந்தக் கொள்ளைக் கூட்ட முறை அடிப்படையில் அமைக்கப்படும் எந்த அரசும் மக்களுக்குப் பணியாற்ற இயலாது!

"20 ஆண்டுக்காலம் நேர்மையற்ற முறையில் ஆட்சி செய்ததை மக்கள் நிராகரித்தபோதிலும், பதவிக்குத் திரும்பக் காங்கிரசு முயற்சி செய்வதைக் காண்பதற்கு மக்கள் இப்பொழுது தயாராக இருக்கவேண்டும்!

"காங்கிரசு—சோஷித் தளக் கூட்டணி அரசு அமைக்க அனுமதிக்கப்பட்டால், அது தூய அல்லது நிலையான நிர்வாகத்தை அளிக்க முடியாது; அது விரைவில் கவிழும்!"

இவ்வாறு, பீகார் முதலமைச்சர் மகாமாய பிரசாத் சின்கா, தமது அமைச்சரவை வீழ்ச்சி பற்றிக் கருத்தறிவிக்கையில் கூறியுள்ளார்.

10 மாதம் 21 நாட்கள் பதவியிலிருந்த பீகார் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக, காங்கிரசு—சோஷித் தளக் கூட்டணி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், சட்டமன்றத்தில், 13 வாக்கு வித்தியாசத்தில் நிறைவேறியது; தீர்மானத்திற்கு ஆதரவாக 163 ஓட்டுகளும், எதிராக 150 ஓட்டுகளும் பதிவாயின.

முடிவு அறிவிக்கப்பட்டதும், தமது அமைச்சரவையின் பதவி விலகல் கடிதத்தை, கவர்னருக்கு முதலமைச்சர் அனுப்பிவைத்தார்; உரிய ஏற்பாடுகள் செய்யும் வரையில், முதலமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் பதவியிலிருக்க கவர்னர் கனுங்கோ கேட்டுக் கொண்டார்.

முதலமைச்சர் மகாமாயா பிரசாத், மேலும் கூறியதாவது:—

"வாக்காளர்களின் தெளிவான தீர்ப்பு அடிப்படையில் உண்மையான—நிலையுள்ள நல்ல அரசு ஏற்பட இடைக்காலத் தேர்தல் நடத்துமாறு சனநாயகத்தின் பெயரால் கோருவேன்.

"காங்கிரசின் 'சைத்தான்' ஆட்சியை, தேர்தலில் மக்கள் நிராகரித்ததை நினைவில் வைக்க வேண்டும்!

"மிக மோசமான முறைகள் மூலம் புறக்கடை வழியாகத் திரும்பி (பதவிக்கு) வர காங்கிரசு முயற்சிக்கிறது! யார் ஆளவேண்டும் என்பதை மக்கள் முடிவு செய்யட்டும்!"

தமிழுக்கு உயிரீந்த தியாகிகளுக்கு வீர வணக்கம்

தலைநகர்க் கூட்டத்தில் அறிஞர் அண்ணா கலந்துகொண்டார்

தமிழகமெங்கும் அமைச்சர்கள் – முன்னணித் தோழர்கள் பங்கேற்பு

சென்னை, சன. 25—

தாய்மொழி காக்கத் தம் இன்னுயிரீந்த தியாகச் செம்மல்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில், இன்று தமிழகமெங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில், அமைச்சர்களும் கழக முன்னணித் தோழர்களும், மாணவ மணிகளும் கலந்துகொண்டு தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

தலைநகரான சென்னையில், நடந்த கூட்டத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டார்கள்.

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்துக்கு, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் தலைமைவகித்தார்.

தென்னகப் பல்கலைக் குழுவைச் சேர்ந்த தோழர் சதாசிவம், தியாகிகட்கு வணக்கம் செய்யும் பாடலொன்றும், தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடினார்.

தோழர் நாஞ்சில் இராசரத்தினம் இரண்டு பாடல்கள் பாடினார்.

பின்னர், திரு. நீலநாராயணன் தலைமையுரையாற்றுகையில், தமிழுக்கு இன்னுயிரீந்த தியாகச் செம்மல்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படுவது உறுதி என்றும் இதற்கு அண்ணா அவர்களும்—தமிழக அரசும் உதவுவார்கள் என்றும் தெரிவித்தார்.

அடுத்து, தோழர்கள் எம். குமார் சிறிது நேரம் பேசினார்.

பின்னர், மாணவத் தோழர் துரை முருகன், 1965-ல் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்ட நிகழ்ச்சிகளையும், அப்போதிருந்த அரசு புரிந்த கொடுமைகளையும் உருக்கத்தோடு எடுத்துரைத்தார்.

அடுத்து, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவத் தோழர்களான 'திராவிடன்' செல்வம், ஆண்டியப்பன், கோபாலன், கருணாகரன், இராசு ஆகியோர் தங்கள வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. எஸ். கோவிந்தராசன், இராம. அரங்கண்ணல், நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தியாகிகளுக்கு வணக்கம்செலுத்தி உருக்கமும் விளக்கமும் நிறைந்த உரை நிகழ்த்தினார்கள்.

சட்டமன்றத்தில் இந்தி ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நடைபெறும் கூட்டமாகையால், அறிஞர் அண்ணா அவர்களின் உரையைக் கேட்கப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து குழுமியிருந்தனர்; ஏராளமான தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

மாணவத் தியாகிகளின் குடும்பங்கட்கு ஆறுதல்

அமைச்சர் செ. மாதவன் நேரில் சென்று கூறினார்

கோவை, சன. 25—

கடந்த சனவரி 12-ஆம் நாள், காரமடையில், இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தபோது பஸ்ஸினால் மோதுண்டு இறந்த மாணவர்கள் வீடுகளுக்கும், காயமடைந்தவர்கள் வீடுகளுக்கும் சட்ட அமைச்சர் திரு. மாதவன் சென்று, அவர்கள் குடும்பங்களுக்குத் தமிழக அரசின் சார்பில் இரங்கலும் ஆறுதலும் தெரிவித்து வந்தார்.

குடியரசு நாள் விருது

ஏற்க நால்வர் மறுப்பு

புதுடில்லி, சன. 25—

குடியரசு நாளையொட்டி குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் விருதுகளைப் பெற்றுக் கொள்ள நான்குபேர் மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

பாரத ரத்னா—பத்ம விபூஷன்—பத்ம பூஷன்—பத்ம ஸ்ரீ—ஆகிய பட்ட விருதுகளை, பல்வேறு துறைகளிலும் சிறப்பான பணியாற்றியவர்கட்குக் குடியரசு நாளில் வழங்குவது வழக்கம்; அதன்படி இவ்வாண்டு யார் யாருக்கு இந்த விருதுகளை வழங்குவது என்ற பட்டியல் தயாரிக்கப் பட்டு வருகிறது.

பொதுக்கூட்டம்

28--1--68

செங்கற்பட்டு

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தர்கா திடலில்; தலைவர்: எம். வி. எத்திராசன்; பேசுவோர்: புலவர் கா. கோவிந்தன், எம்.ஏ. (சட்டமன்றத் துணைத் தலைவர்), டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., நாவளவன் பி.ஏ., செ. எ. பலராமன், வ. ஆ. பசுபதி எம்.சி., செ. மு. தட்சிணாமூர்த்தி, மா. வீராசாமி எம்.சி.